# Kamarajar Speech in Tamil for Students

நம் மனதில் இன்றும் நிலைத்து கொண்டிருக்கும் தலைவர்களுள் ஒருவர் கர்மவீரர் காமராஜர். தமிழகத்தைக் தலைநிமிர செய்வதற்காக அயராது உழைத்த தன்னலமற்ற தலைவர் காமராசர். ஒரு மனிதன் எப்படி வாழ வேண்டும், எவ்வாறு அரசியல் செய்ய வேண்டும் என்று எடுத்துரைத்த மாமனிதன் பெருந்தலைவர் காமராஜர் ஆவார்.

காமராஜர் பிறப்பு : காமராசர் விருதுநகரில் 1903-ம் ஆண்டு ஜூலை 15-ம் தேதி பிறந்தார். இவரது பெற்றோர் குமாரசாமி நாடார் மற்றும் சிவகாமி அம்மாள் ஆவர். இளம் வயதிலேயே காமராஜர் அவர்கள் தந்தையை இழந்து விட்டார். காமராஜர் தந்தையை இழந்த பின்பு பொருளை ஈட்டுவதற்காக மாமாவின் கடையில் வேலை செய்தார்.

வேலை செய்து கொண்டிருக்கும் போதே செய்தித்தாள்களை படிப்பது, தலைவர்களின் சொற்பொழிவை கேட்பது போன்ற செயல்களில் ஈடுபட்டு கொண்டிருந்தார். பின் நாட்டின் மீது இருந்த பற்றால் காங்கிரஸ் கட்சியில் தொண்டனாக சேர்ந்தார்.

அரசியல் மீது இருந்த ஆர்வமும், நாட்டுப்பற்றும் இவரை 1940-ல் நடந்த காங்கிரஸ் கமிட்டி தேர்தலில் தலைவராக பொறுப்பேற்க வைத்தது. ஒத்துழையாமை இயக்கம், உப்பு சத்தியாகிரகம் மற்றும் 1942-ல் நடைபெற்ற ஆகஸ்ட் புரட்சி போன்ற போராட்டங்களில் கலந்து கொண்டார்.

காமராஜர் நாட்டுப்பணி : அரசியலில் ஒரு தொண்டராக இருந்த கர்மவீரர் காமராஜர் அவர்கள் 1954-ல் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்று முதலமைச்சராக பொறுப்பேற்றார். ஒன்பது ஆண்டுகள் தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த பெருமைக்குரியவர்.

PDFseva.com

முதலமைச்சராக இருந்த போது மக்களுக்கு இவர் செய்த சேவைகள் அளவுக்கறியது. நாட்டில் விவசாயத்தை பெருக்குவதற்காக பல நீர்த்தேக்க திட்டங்களை அமைத்து நீர்வளத்தையும், நில வளத்தையும் பெருக்கினார். நாட்டின் முன்னேற்றத்திற்காக பல்வேறு தொழிற்சாலைகளை நிறுவினார்.

காமராஜர் கல்விப் பணிகள் : படிக்காத மேதை என்ற புகழுக்கு சொந்தக்காரராக இருக்கும் காமராஜர் அவர்கள் குழந்தைகள் அனைவரும் கல்வி கற்க வேண்டும் என சத்துணவு திட்டத்தை அறிமுகப்படுத்தினார். ஏழை மாணவர்களும் படிக்க வேண்டும் என இலவச கல்வி மற்றும் பள்ளிக்கூடங்களை நிறுவினார்.

முடிவுரை : குடும்ப வாழ்க்கை, ஆட்சி முறை என அனைத்திலும் சிறந்து விளங்கியவர். அரசியல் மூலம் மிக உயர்ந்த இடத்திற்கு போனாலும் தனது வாழ்நாள் முழுவதும் எளிமையாக வாழ்ந்தவர். தன்னலம் கருதாமல் பிறர் நலம் கருதி வாழ்ந்த தியாக செம்மல் பெருந்தலைவர் காமராஜர் ஆவார். புகழின் உச்சத்தை அடைந்த காமராஜர் அவர்கள் 1975-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2 ஆம் தேதி இவ்வுலகை விட்டு பிரிந்தார்.

All PDF Collection
PDF Seva

Hi! We're PDFSeva. A dedicated portal where one can download any kind of PDF files for free, **with just a single click**.

PDFSeva.com